**நெழுவ பிரதேச சபை - 2023**
---------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நெழுவ பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவுக் கணக்கு, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, நெழுவ பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றுகை மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவணையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, இந்த அறிக்கையின் 1.6 (இ) பந்தி தவிர முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு காணப்பட்ட மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டிகளின் பெறுமதி ரூபா 323,790 தொகை மற்றும் நீதிமன்றத் தண்டப் பணம் சிட்டையிடல் ரூபா 107,128 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | பொது காசேட்டின் மீதி மற்றும் வங்கி நடைமுறைக் கணக்கு மீதியிடையே ரூபா 21,899 இற்கான வித்தியாசமொன்று காணப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பயன்படுத்தப்படாத ரூபா 27,220 தொகை பெறுமதியுடைய மின்சார இருப்புக் கிரயம் மற்றும் நிகரத் தேறிய பெறுமதி ஆகிய இரண்டில் குறைந்த பெறுமதியினை கணக்கீடு செய்திருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

**1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 11,650,093 தொகைக்கான 14 கணக்கு விடயங்களை திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாதுள்ளது. | இணங்குகின்றேன் என. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.7 இணங்காமை**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 இன் 15 இலக்க பிரதேச சபை அதிகார சட்டத்தின் | | | |
| (i) பிரிவு 23 | பாதைகள் தொடர்பான விபரங்கள் அடங்கிய பாதைப் பதிவேடொன்று பேணப்பட வேண்டியிருந்த போதிலும் அந்த பதிவேடு தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரி செய்யப்படும் என. | அதிகார சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ii) பிரிவு 24 | 2020 ஆண்டின் பின்னர் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற சபையின் பாதைகள் தொடர்பான விபரங்கள் வர்த்தமானியின் மூலம் பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (iii) பிரிவு 134(1) | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற முன்னேற்றப்பட்ட பிரதேசங்களை இனங்கண்டு அங்குள்ள அசையாத ஆதனங்களுக்காக வீதவரி அறவீடு செய்தல் தொடர்பாக | முன்னேற்றப்பட்ட பிரதேசம் என பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என. | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கவனம் செலுத்தியிருக்கவில்லை. | | |
| (ஆ) | 2021 மாகாண சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதி 560 மற்றும் 561 | கணினிகள் மற்றும் அது சார்ந்த துணைக் கருவிகள் வெவ்வேறாக ஆவணப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அதன் படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரி செய்யப்படும் என. | விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 104 | கப் வண்டிக்கு ஏற்பட்டிருந்த சேதம் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | -மேற்படி- | பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஈ) | 2001 ஆகஸ்ட் 21 திகதிய 18/2001 இலக்கங் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கை | சபையின் 07 உத்தியோகத்தர்கள் 05 வருடங்கள் முதல் 10 வருடங்கள் இடைப்பட்ட வீச்சில் சுற்றறிக்கை விதிகளுக்கு முரணாக ஒரே இடத்தில் சேவையாற்றுவது காணக்கூடியதாக இருந்தது. | வருடாந்த இடமாற்ற விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என. | சுற்றறிக்கையின் படி செயற்பட வேண்டும். |
| (உ) | தென் மாகாண பிரதான செயலாளரின் 2018 மே 22 திகதிய SS/2/12/05 இலக்கங் கொண்ட சுற்றறிக்கை | பயன்படுத்த முடியாதவாறு சிதைவுற்ற நிலையில் காணப்பட்ட 04 வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | டிரக்டர் பவுசரின் துருப்பிடித்த இடங்களை சரிசெய்து பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் உக்கிய ஏனைய வாகனங்களை அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்க எடுக்கப்படும் என. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2023 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 5,615,264 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 5,178,452 தொகையாக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

| வருமான மூலம் | 2023 மதிப்பீட்டு வருமானம் | 2023 சிட்டையி டப்பட்ட வருமானம் | 2023 சேகரிக்க ப்பட்ட வருமானம் | 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | 2022 மதிப்பீட்டு வருமானம் | 2022 சிட்டையி டப்பட்ட வருமானம் | 2022 சேகரிக்க ப்பட்ட வருமானம | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 354,040 | 444,710 | 436,742 | 114,172 | 425,000 | 438,883 | 390,772 | 106,204 |
| வாடகை | 6,878,922 | 10,530,990 | 6,607,203 | 7,242,474 | 7,587,694 | 6,561,510 | 6,843,559 | 3,318,687 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 201,500 | 245,250 | 245,000 | 250 | 283,600 | 172,430 | 172,430 | - |
| ஏனைய வரு மானங்கள் | 2,283,500 | 4,051,459 | 3,153,337 | 1,014,298 | 2,395,604 | 1,076,653 | 1,102,737 | 116,176 |
| | 9,717,962 | 15,272,409 | 10,442,282 | 8,371,194 | 10,691,898 | 8,249,476 | 8,509,498 | 3,541,067 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை வருமானம் ரூபா 3,541,067 தொகையாக காணப்பட்டதுடன், ஆண்டின் போது சிட்டையிடல் ரூபா 15,272,409 தொகையாக காணப்பட்டது. வருட இறுதியில் உள்ளவாறு நிலுவை மீதி ரூபா 8,371,194 தொகையாக இருந்தது. | எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | கடையறைகளுக்கான அனைத்து உடன்படிக்கைகளும் 03 வருடங்களுக்கு ஒரு முறை நாளதுவரை ஆக்கப்பட வேண்டியிருந்த போதிலும் சபைக்கு சொந்தமான 08 கடையறைகள் தொடர்பான வாடகை உடன்படிக்கை 2020 ஆண்டில் இருந்து முன்வரும் 04 வருடங்களுக்காக செல்லுபடியாகும் விதத்தில் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும் 13 கடையறைகள் தொடர்பாக வாடகை உடன்படிக்கைகள் 2019 ஆண்டின் பின்னர் நாளதுவரை ஆக்குவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இது தொடர்பாக உரிய நடவடிக்கை எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் என. | சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நெழுவ சிறப்பு வர்த்தக கட்டிடத் தொகுதியின் கடையறைகள் வாடகைக்கு வழங்கும் போது 01 வருடத்திற்கும் 03 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் முதல் 12 கடை உரிமையாளர்களிடம் இருந்து ரூபா 474,096 தொகை மற்றும் 03 வருடங்களை மிகைத்துள்ள ஒரு கடையுரிமையாளரிடம் ரூபா 48,715 தொகை அறவீடு செய்யப்பட வேண்டிக் காணப்பட்டது. | எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | 01 வருடத்திற்கும் 03 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் முதல் மீன் விற்பனை நிலையத்தை வாடகைக்கு கொடுத்திருந்தன் மீது ரூபா 175,165 தொகையும், தூவிலி எல்ல வருடாந்த டெண்டர் மூலம் அறவிடப்பட வேண்டிய தொகையாக இரண்டு நபர்களிடமிருந்து ரூபா 615,809 தொகையும் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | பதிவேட்டின் படி சபையின் எல்லையில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த 70 அறிவித்தல் பலகைகள் தொடர்பாக 2022 திசெம்பர் 30 திகதிய இலக்கம் 2313 கொண்ட வர்த்தமானியின் ஏற்பாடுகளின் பிரகாரம் ரூபா 449,025 இற்கான கட்டணமொன்று அறவீடு செய்திருக்காததுடன் இது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவைத் தொகை எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 815,153 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 5,683,520 தொகையும் கிடைக்க வேண்டியிருந்தது. | எதிர்காலத்தில் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் அறவீடு செய்யப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தூவிலி எல்ல கடையறைகள் நிர்மாணித்தல் (இரண்டாம் கட்டம்) கைவேலி தயாரிக்கும் நிர்மாண வேலைக்காக 2021 திசெம்பர் 15 திகதி பிரதான செயலாளரின் செலவுத் தலைப்பின் கீழ் ஏற்பாடுகள் கிடைத்திருந்த போதிலும் ஏற்பாடுகள் கிடைக்கப்பட்டு ஒரு வருடம் கடக்கும் வரை இந்த நிர்மாண வேலை மேற்கொள்ளப்படாமையால் பண்டங்களின் விலை அதிகரிப்பு காரணமாக ரூபா 199,753 தொகை மிகையாக செலுத்த நேரிட்டிருந்தது. | மூலப் பொருட்களின் விலைகள் விரைவாக அதிகரித்த காரணத்தினால் ஒப்பந்தக்காரர் ஒருவர் முன்வராமையே ஆகும் என. | அங்கீகரிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் விரைவாக செயற்படுத்த வேண்டும். |

### 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ள வேண்டிய 23 நிறுவனங்கள் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளாமையால் அதன் மூலம் சுற்றாடலுக்கு ஏற்படுகின்ற சேதம் தொடர்பாக சபை கவனம் செலுத்தியிருக்காததுடன், அதன் படி அனுமதிப்பத்திரக் கட்டணமாக ரூபா 103,500 தொகை மற்றும் பரிசோதனை கட்டணமாக ரூபா 69,000 தொகை சபை அறவீடு செய்திருக்கவில்லை. | குறிப்பிட்ட அலுவல்கள் விரைவாக மேற்கொள்ளப்படும் என. | வர்த்தமானிக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | இலக்கமிடப்பட்ட வீதி விளக்குப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்காமையால் ஒவ்வொரு விளக்குத் தூண்களுக்கும் மேற்கொள்ளப்படுகின்ற திருத்த வேலைகள் தொடர்பாக விபரங்களை இனங்காண முடியாதிருந்ததுடன் வீதி விளக்கு தூண்களுக்கிடையே தூரத்தை இனங்காணும் செய்முறையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. 2023 ஆண்டின் போது வீதி விளக்கு பராமரிப்புக்காக ரூபா 434,009 தொகையொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. | அதிகாரப் பிரதேசத்தில் 786 வீதி விளக்குத் தூண்கள் நிறுவப்பட்டிருந்தது என. | தொடர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான அனைத்து ஆதனங்களும் சபையினால் நிருவகிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணாக 08 காணிகள் அங்கீகாரமின்றி பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், அது தொடர்பாக சபையினால் நடவடிக்கைகள் ஏதும் எடுத்திருக்கவில்லை. | சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என. | சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | நிலையான சொத்துக்களின் பதிவேட்டில் அடங்கியுள்ள 11 காணிகளின் உரிமை சபைக்கு சொந்தமாக காணப்படாததுடன் அவற்றின் உரிமையை தீர்த்துக் | குறிப்பிட்ட அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என. | உரிமையை தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கொள்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (இ) | 2015 ஆண்டின் போது உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சிலிருந்து கிடைத்திருந்த ரூபா 6,800,000 தொகைக்கான 6000 லீற்றர் Foton நீர் பவுசர் பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | வேண்டுதல்கள் கிடைக்கக் கூடிய வீடுகளுக்காக சரிவுகளைக் கொண்ட ஒழுங்கை பாதைகள் காணப்படுவதனால் இந்த நீர் பவுசர் பிரயாணம் செய்யும் வசதியீனங்கள் காணப்படுகின்றது என. | சபைக்கு சொந்தமான சொத்துக்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2013 ஆண்டின் போது உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சிலிருந்து கிடைத்திருந்த ரூபா 60,000 பெறுமதியான டிரக்டர் டேலரை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | உரித்தாக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | நூலக புத்தகக் கணிப்பீட்டின் படி 02 நூலகங்களில் 219 புத்தகங்கள் காணாமல் போயிருந்ததுடன் அது தொடர்பாக நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை. | நூலகக் குழுவின் பரிந்துரையின் படி மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என. | பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 3.4 செயற்திட்டங்கள், செய்பணிகள் மற்றும் மூலதன வேலைகளில் தாமதங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 ஆண்டில் செயற்படுத்துவதற்காக திட்டமிடப்பட்டிருந்த கூட்டுப் பெறுமதி ரூபா 23,500,000 தொகைக்கான 02 நிர்மாண வேலைகள் மீளாய்வாண்டின் போதும் செயற்படுத்தியிருக்கவில்லை. | ஏற்பாடுகள் கிடைக்கப் பெறவில்லை என. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி செயற்பட வேண்டும். |
| (ஆ) | தென் மாகாண அபிவிருத்தித் திட்டம் 2023 இன் கீழ் வீதி அபிவிருத்திக்காக 10 செயற்திட்டங்கள் செயற்படுத்துவதற்காக ரூபா 5,000,000 இற்கான ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 2,900,000 தொகை பெறுமதியான 07 நிர்மாண வேலைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | உள்ளூராட்சி ஆணையாளரின் 2023.12.04 திகதிய கடிதத்தின் மூலம் செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட பணம் இரத்துச் செய்யப்பட்டது என. | உரிய முறையில் பிரதேச அபிவிருத்தி அலுவல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.5 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையில் கடமையாற்றி இறந்திருந்த 02 உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 10,730 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்காக உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என. | கடன்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |